



# சரியான பார்வை... சரியான வழி... சரியான செயல்! 2

**– தா.நெடுஞ்செழியன்**



பொதுவாக நாம்தோல்வியைப் பற்றி மட்டுமே பேசுகிறோம். தோல்விக்கான காரணம் எது? ஏன் தோல்வி வந்தது? எப்படி அதைச் சரி செய்வது என்ற சிந்திக்கும் தன்மை நமது கல்விச்சூழலில் இல்லாமல் போய்விட்டது. தமிழகம் கல்வியில் பின்னோக்கிப் போய்விட்டது என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

எந்தவொரு அகில இந்திய தேர்வாகட்டும், அது நீட் ஆகட்டும், ஐஐடி ஜேஇஇ ஆகட்டும் தமிழ்நாட்டு மாணவர்கள் சிறப்பாக தேர்வு எழுத முடியாத சூழல் உள்ளது.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு ஓர் ஆசிரியரிடம் கேட்டால், ''நான் சொல்லிக் கொடுத்த பாடத்தை தேர்வில் எப்படிக் கேட்டாலும், எந்தவிதமாக மாற்றிக் கேட்டாலும் சரியாக, சிறப்பாக தேர்வு எழுதும் வகையில் என் மாணவர்களுக்குப் பாடத்தைப் புரியும்படி சொல்லிக் கொடுத்திருக்கிறேன். அவர்களும் பாடத்தைச் சரியாக உள்வாங்கி எப்படிக் கேட்டாலும் புரியும்படி பதில் எழுதுவார்கள்'' என்று பெருமையாகத்தான் சொல்வார்.

ஆனால் இப்போது முக்கியமான பகுதி, அடிக்கடி தேர்வில் கேட்கப்படும் பகுதியென்று 60 அல்லது 70 சதவீத பாடங்களை மட்டுமே சொல்லித் தருகிறார்கள். 30 சதவீத பாடங்களை ஆசிரியர்கள் சொல்லித் தருவதில்லை. அப்போதெல்லாம் மாணவர்கள் புத்தகத்தில் 100 சதவீதத்தையும் முழுமையாகப் படிக்க வேண்டும். ஆனால் இப்போது குறிப்பிட்ட சில பகுதிகளைமட்டும் படிக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். இந்தத் தவறான வழிகாட்டுதலின் காரணமாக, மாணவர்கள் முழுமையாக தங்களுடைய பாடங்களைப் படிப்பதில்லை. இவற்றையெல்லாம் கேட்கமாட்டார்கள்; இவற்றைத்தான் கேட்பார்கள் என்று நினைத்துக் கொண்டு மாணவர்கள் முழுமையாகத் தங்களுடைய பாடங்களைப் படிப்பதில்லை.

'படிப்பது- புரிந்து கொள்வது - நினைவுபடுத்துவது' என்ற வழிமுறையில் மாணவர்கள் கற்பதில்லை. மாணவர்கள் பாடங்களைப் புரிந்து படித்தால் எப்படிக் கேட்டாலும் பதில் எழுதும் திறமை பெற்றுவிடுவார்கள். இப்போது மதிப்பெண்கள் எடுப்பதை வைத்து ஒரு மாணவரின் திறமையை மதிப்பிடக் கூடாது. ஒரு மாணவரிடம் அடங்கியுள்ள பல்வேறு திறமைகளையும் கணக்கிட்டே ஒரு மாணவரை மதிப்பிட வேண்டும்.

அப்படியே மதிப்பெண்களுக்காகப் படிக்கும் ஒரு மாணவர் எவ்வளவுதான் நன்றாகப் படித்திருந்தாலும், தேர்வு எழுதும் அந்த 3 மணி நேரத்தில் தான் படித்ததை எந்த அளவுக்கு திரும்பவும் நினைவுக்குக் கொண்டு வர அவரால் முடிகிறது என்பதே அவர் எடுக்கும் மதிப்பெண்களைத் தீர்மானிக்கிறது. நன்றாகப் படித்தால் நிறைய மதிப்பெண்கள் எடுக்கலாம் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

தேர்வு எழுதும் அன்றைய நாளின் மனநிலை (MOOD FORMATION) எப்படி உள்ளது என்பது மிகவும் முக்கியம். நீட் தேர்வு எழுதச் செல்லும் மாணவர்களை பாகிஸ்தான் – இந்திய எல்லைப்புற பகுதியான வாகா பகுதியில் பரிசோதிப்பது போல கடுமையாகப் பரிசோதித்து தேர்வு எழுத அனுப்பினால், தேர்வு எழுத ஹாலுக்குள் போகும்போதே மனம் படுத்துவிடும். மனரீதியான பிரச்னை ஏற்பட்டுவிட்டால் அப்புறம் எப்படி நன்றாகத் தேர்வு எழுத மாணவர் தயாராக முடியும்? தேர்வு எழுதுவதில் மட்டுமே எப்படி அவர் தனது கவனத்தைக் குவிக்க முடியும்? நன்றாகத் தேர்வு எழுதும் மனநிலையை மாணவர்கள் அவ்வளவு சீக்கிரம் திரும்பக் கொண்டு வர முடியாது.

தேர்வு அன்று காலை 10 மணிக்குத் தேர்வு என்றால் மாணவர்களை 7.30 மணிக்கே வரச் சொல்வார்கள். 7.30 மணிக்கு தேர்வு நடக்கும் இடத்தில் இருக்க வேண்டும் என்றால், மாணவர்கள் வீட்டை விட்டு 6.30 மணிக்கே கிளம்ப வேண்டும். சற்று தொலைவு எனில் அதற்கு முன்னதாகவே கிளம்ப வேண்டும். காலை 6.30 மணிக்கு காலை உணவை முடித்துக் கொண்டு கிளம்பிய மாணவர்களுக்கு, 10.30 மணிக்கு தேர்வு எழுத தொடங்கிய ஒரு மணி நேரத்தில் பசிக்க ஆரம்பித்துவிடும். அப்புறம் எப்படி தேர்வில் முழு கவனம் செலுத்தி மாணவர்கள் தேர்வை எழுத முடியும்? முழுகவனம் செலுத்தி தேர்வு எழுதாத மாணவர்களில் இருந்துதான் நாம் மாணவர்களைத் தேர்வு செய்கிறோம் என்றால், எதிர்காலத்தில் சிறப்பான, திறமையான மாணவர்களை எப்படி நம்மால் உருவாக்க முடியும்? இவையெல்லாம் தேர்வு நடத்துவதில் உள்ள நிர்வாகக் கோளாறுகள். சிறப்பாக தேர்வு நடத்துவதைப் பற்றி யோசித்துப் பார்க்க வேண்டும்.

''மாணவர்களுக்கு ஓட்டுரிமை இல்லை. அதனால்தான் யாரும் அவர்களைப் பற்றி கவலைப்படுவதில்லை'' என்று நோபல் பரிசு பெற்ற கைலாஷ் சத்யார்த்தி ஒருமுறை சொன்னார். அது நிதர்சனமான உண்மை.

எனவே பாடத்தைத் தாண்டி மாணவர்களின் திறமையை வெளிக்கொண்டு வருவதற்கான சூழல்களை உருவாக்க கல்வித்துறை நினைக்க வேண்டும். பெற்றோர்களும் மதிப்பெண்களுக்காக மாணவர்களை விரட்டுவதை விட்டுவிட்டு, உலகில் எந்த மூலைக்குச் சென்றாலும், எந்தச் சூழலிலும் , எந்தச் சவாலையும் எதிர்கொள்ளும் திறமைகளை மாணவர்கள் வளர்த்துக் கொள்வதற்கு பெற்றோர் உதவ வேண்டும். மாணவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிறுவனங்களைத் தனியாரிடம் விட்டதும் கல்வித்துறை சிறப்பாகச் செயல்பட முடியாமல் போனதற்கு இன்னொரு காரணம். 15– 20 ஆண்டுகளுக்கு முன்பு நிறைய தனியார் ஆசிரியர் பயிற்சி கல்வி நிறுவனங்கள் தோன்றின. அவற்றில் சில பணத்தை வாங்கிக் கொண்டு கல்விநிறுவனத்துக்கு வராமலேயே – வீட்டிலேயே இருந்தவர்களுக்குக் கூட – பி.எட் பட்டம் வழங்கிய கொடுமையான நிகழ்வுகள் நடந்ததாகக் கூறப்பட்டது. அப்படி உருவான ஆசிரியர்கள் கற்றுக் கொடுக்கும் கல்வி எப்படி சிறப்பானதாக இருக்க முடியும்? மாணவர்களுக்கு நன்கு புரியும்படி அவர்கள் எப்படிச் சொல்லித் தருவார்கள்? ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களைத் தனியாரிடம் விட்டதன் தாக்கங்களை இப்போது நாம் சந்திக்க வேண்டியிருக்கிறது.

ஆசிரியர்களின் எண்ணிக்கையும் தற்போது குறைந்திருக்கிறது. ஒரு வகுப்பில் 60 மாணவர்கள் இருந்தால் – மாணவர்களின் புரிந்து கொள்ளும் திறனில் நிறைய வேறுபாடுகள் இருக்கக் கூடிய சூழலில் – ஓர் ஆசிரியர் எப்படி 60 பேருக்கும் எளிதாகப் புரியும்படியாக கற்றுத் தர முடியும்? அதற்கு அவர் நிறைய உழைக்க வேண்டியிருக்கும். மாணவர்களுக்கு நிறைய உதாரணங்களுடன் அவர் கற்றுத் தர வேண்டும். அத்தகைய சொல்லித்தரும் சூழல் இல்லாததினால் நம் கல்வித்தரம் குறைந்துவிட்டது.

மேலும் மாறிவரும் உலகச் சூழலுக்கு ஏற்ப பல்வேறு துறைகளில் ஏற்படக் கூடிய மாற்றங்களை, வளர்ச்சிகளை ஆசிரியர்கள் உடனுக்குடன் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. மொபைல் போன் பயன்பாட்டினால் பல்வேறு ஊடகங்களின் தொடர்பு மாணவர்களுக்கு எளிதில் கிடைத்துவிடுகிறது. உலகின் புதிய மாற்றங்களை அவர்கள் உடனுக்குடன் தெரிந்து கொள்ள முடிகிறது. இந்நிலையில் ஆசிரியர்கள் பழைய பாடங்களை மட்டும் தெரிந்து கொண்டிருப்பதால் எந்தப் பயனும் இல்லை. அவர்கள் புற உலகின் வளர்ச்சிக்கேற்ப தங்களைத் தகுதிப் படுத்திக் கொள்ள வேண்டும். ஆசிரியர்கள் தங்களைப் புதுப்பித்துக் கொள்வதற்குத் தேவையான முறையான, தொடர்ச்சியான பயிற்சிகளை வழங்க கல்வித்துறை திட்டமிட வேண்டும்.

ஆசிரியர்கள் தங்களுடைய கற்பித்தல் தொடர்பான அனுபவங்களை பிற ஆசிரியர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

கல்வி கற்றுத் தரும் ஆசிரியர்களை அரசு பிற பணிகளில் ஈடுபடுத்தக் கூடாது. தேர்தல் நேரம் வந்துவிட்டால், தேர்தல் பணிகளுக்கு ஆசிரியர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள். மக்கள் தொகை கணக்கெடுப்பு உட்பட பல அரசு வேலைகளைச் செய்வதற்கு ஆசிரியர்களைப் பயன்படுத்தினால், கல்வி வளர்ச்சிக்காக முழுவீச்சுடன் ஆசிரியர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்வது எப்படி?

கல்வியைத் தரமாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடாமல் – மாணவர்களின் பல்வேறு திறமைகளை வளர்த்தெடுக்காமல் – இப்போதுள்ள நிலையே தொடரும் என்றால், எதிர்காலம் நிறையப் பிரச்னைகளைச் சந்திக்க வேண்டியிருக்கும். வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். அதனால் சமூகத்தில் பல பிரச்னைகள் ஏற்படும். இளைஞர்களின் மூளை ஆக்கப்பூர்வமாகச் சிந்திக்காமல், அழிவுப்பூர்வமான சிந்தனைகளில் ஈடுபடும். பயங்கரவாதம் தலைதூக்கும். பாதுகாப்பின்மை அதிகரிக்கும்.

நமது நாட்டை விட, ரஷ்யாவிலும், சீனாவிலும் நிர்வாகச் சீர்கேடுகள்– ஊழல்கள் அதிகம். ஆனால் கல்வியிலும் அறிவியல் வளர்ச்சியிலும் எந்தவிதமான சீர்கேடுகளும், ஊழலும் இல்லை.

நம்நாட்டிலோ கல்வி சார்ந்த பணிகளில் அரசியல் குறுக்கீடுகள் அதிகம் உள்ளன. கல்வி தரம் குறைந்து போனதற்கு இத்தகைய குறுக்கீடுகளும் காரணமாக உள்ளன.

(தொடரும்)

**கட்டுரையாசிரியர்: சமூக கல்வி ஆர்வலர்**

www.indiacollegefinder.org